DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண். 268/2022**

**அ.சா.– 10**

| | |
|---|---|
| பெயர் : திரு. ராஜா | கிராமம்: |
| த/பெ. : திரு. மாரிமுத்து | தாலூக்கா : |
| வயது : | ஜாதி : |
| தொழில்: | மதம் : |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது மாவட்ட கூடுதல் நீதிபதி அவர்கள், Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 24th day of April, 2024.

( எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர் )

**முதல்விசாரணை**:–

நான் தற்பொழுது சந்தியூர், அம்மாபாளையம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். நான் கடந்த 2021ம் வருடம் அம்மாபேட்டை டவுன் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். 04.08.2021ம் தேதி அம்மாபேட்டை காவல்நிலைய ஆய்வாளர் திரு.கணேசன் 1வது எதிரி ஷாலினியை ஒரு குற்ற வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவேண்டும் என்றும், அதற்கு என்னை சாட்சியாக இருக்க வேண்டும் என்றும் ஒரு காவலர் மூலம் கேட்டுக்கொண்டதன்பேரில் அன்றைய தினம் காலை 9 மணியளவில் நானும் என் உதவியாளர் செந்தில்குமார் என்பவரும் அம்மாபேட்டை காவல்நிலையத்திற்கு சென்றோம்.

காவல்நிலையத்தில் 1வது எதிரி ஷாலினி இருந்தார். ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் 1வது எதிரி ஷாலினியை விசாரித்தார். விசாரணையில் 1வது எதிரி ஷாலினி தனது கணவர் பிரபுவை கொலை செய்ததாக சொன்னார். மேற்படி விவரம் குறித்து 1வது எதிரி எவ்வித அச்சுறுத்தலோ, துன்புறுத்தலோ இன்றி தாமாக

முன்வந்து சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை காவல்நிலையத்தில் இருந்த ஒரு காவலர் கணிணியில் பதிவுசெய்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் 1வது எதிரி ஷாலினி தன்னை அழைத்துச் சென்றால் எவ்வாறு சம்பவம் நடந்தது என்று விளக்கி கூறுவதாகவும், தன் கணவருக்கு தெரியாமல் தான் பயன்படுத்தி வந்த செல்போனை ஆஜர்படுத்துவதாகவும் கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி – **அ.சா.ஆ.–12**. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் 1வது எதிரி ஷாலினி கையொப்பமிட்டார். நானும் எனது உதவியாளரும் கையொப்பமிட்டோம்.

பின்பு நான், என் உதவியாளர், ஆய்வாளர் மற்றும் 1வது எதிரி ஆகியோர் சம்பவம் நடந்த வீட்டிற்கு காலை 10.45 மணிக்கு சென்றோம். அந்த வீட்டின் 2வது மாடியில் ஸ்லாப்பில் புதிய இட்லி சட்டியில் மறைத்து வைத்திருந்த செல்போனை எடுத்து 1வது எதிரி ஆய்வாளரிடம் ஆஜர் செய்தார். ஆய்வாளர் மேற்படி செல்போனை மகஜரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் என்உதவியாளரும் கையொப்பமிட்டோம். கைப்பற்றுதல் மகஜர் – **அ.சா.ஆ.–13**. 1வது எதிரி எடுத்து ஆஜர்படுத்திய செல்போன் – **சா.பொ.– 1**.

பின்பு முற்பகல் 11 மணியளவில் இந்த வழக்கில் தலைமறைவாக இருந்த மற்றொரு நபரை தேடி, 1வது எதிரியுடன் அம்மாபேட்டை காவல்நிலையத்திற்கு எதிரில் உள்ள திரு.வி.க. சாலையில் நெல்லை லாலா ஸ்வீட்ஸ் அருகில் நின்றுகொண்டிருந்த 2வது எதிரி அப்பு (எ) காமராஜை 1வது எதிரி அடையாளம் காட்ட ஆய்வாளர் 2வது எதிரியை விசாரித்தார். 2வது எதிரி அந்த விசாரணையில் தான் பிரபுவை கொலை செய்ததை ஒப்புக்கொண்டார். பின்பு 2வது எதிரியை காவல்நிலையத்திற்கு அழைத்து வந்தோம். காவல்நிலையத்தில் 2வது எதிரி எவ்வித அச்சுறுத்தலோ துன்புறுத்தலோ இன்றி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஒரு காவலர் கணிணியில் பதிவுசெய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 2வது எதிரி கையொப்பமிட்டார். நானும் என்உதவியாளரும் கையொப்பமிட்டோம்.

மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் 2வது எதிரி தன்னை அழைத்துச் சென்றால் சம்பவம் எவ்வாறு நடைபெற்றது என்றும், 1 வது எதிரி ஷாலினி தன்னிடம் கொடுத்து மறைத்து வைக்க சொன்ன நகைகளை மறைத்து வைத்திருக்கும் இடத்தை அடையாளம் காட்டுவதாகவும் சொன்னார். 2வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி – **அ.சா.ஆ.–14**. பின்பு 2வது எதிரி பிற்பகல் 1.15 மணிக்கு எடுத்து ஆஜர்செய்த Realme Smart Cellphone –ஐ ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜர் – **அ.சா.ஆ.–15**. 2வது எதிரி எடுத்து ஆஜர்செய்த Realme Smart செல்போன் – **சா.பொ.–2**.

பின்பு பிற்பகல் 2 மணியளவில் சேலம் – கள்ளக்குறிச்சி சாலையில் இரயில்வே பாதையை ஒட்டி 168/600 என்ற மைல் கல் சுமார் 2 பவுன் எடைகொண்ட மீன் டாலருடன் கூடிய தங்க செயின், 1 பவுன் எடையுள்ள அருந்த நிலையில் உள்ள ஓம் என்ற டாலருடன் கூடிய தங்க செயின் ஒன்று, P என்ற Initial பொறிக்கப்பட்ட 1 பவுன் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்று, மிளகாய் பொடியுடன் கூடிய ஒரு பாலிதீன் கவர் ஆகியவற்றை 2வது எதிரி அப்பு என்ற காமராஜ் தோண்டி எடுத்து ஆய்வாளரிடம் ஆஜர்செய்தார். ஆய்வாளர் 2வது எதிரி ஆஜர்செய்த மேற்படி பொருட்களை மகஜரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜர் – **அ.சா.ஆ.–16**. மிளகாய் பொடியுடள் கூடிய பாலிதீன் கவர் – **சா.பொ.–3**. பின்பு அனைவரும் காவல்நிலையம் திரும்பினோம். நானும் என் உதவியாளரும் காவல்நிலையத்திலிருந்து எங்கள் அலுவலகத்திற்கு சென்றுவிட்டோம். ஆய்வாளர் எங்களை விசாரித்தார்.

( 1வது எதிரியின் வழக்குரைஞர் ஆஜரில் இல்லை. இன்று காலை உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனைக்கு சென்றதாக 2வது எதிரியின் வழக்குரைஞர் கூறினார். வாய்ப்பு அளித்தும் 2வது எதிரி தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை. )

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.